**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No. 30/2018**

Prosecution witness : 4

| | |
|---|---|
| Name: சுரேஷ்குமார் | Caste: |
| Father'sName: | Calling: |
| Village: | Religion: |
| Taluk: | Age: |
| Accused absent. Petition u/s 355 BNSS filed | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of** 1873 **on the day of** 04.08.2025

**முதல் விசாரணை**:

நான் தற்போது சேலம் மாவட்டம் வாழப்பாடி காவல் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணியில் உள்ளேன். கடந்த 2017ம் ஆண்டு திண்டுக்கல் மாவட்டம் அம்மையநாயக்கனூர் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணியில் இருந்தபோது ஏற்கனவே அந் நிலையத்தில் தாக்கலான குற்ற எண்.313/2016 ச/பி.8(c)r/w 20(b)(ii)(B) NDPS ACT வழக்கானது புலன்விசாரணையில் இருந்தது. இந்த வழக்கை எனக்கு முன்னர் பணியில் இருந்த காவல் ஆய்வாளர் திரு.பாலமுருகன் என்பவர் புலன் விசாரணை செய்துகொண்டிருந்தபோது அந்நிலையத்திலிருந்து மாறுதாலாகி சென்றுவிட்டபடியால் நான் அவ்விடத்திற்கு பொறுப்பேற்றபின்னர் அந்த வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டும், சாட்சிகளை விசாரணை செய்ததில் மேற்படி சாட்சிகள் அனைவரும் முன்னர் இருந்த காவல் ஆய்வாளரிடம் கூறியதுபோலவே என்னிடமும் கூறியதால் மறுவாக்குமூலம்

எதுவும் தாக்கல் செய்யவில்லை. பின்னர் இந்த வழக்கின் எதிரி பெருமாயி என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட சொத்துக்களை கூடுதல் மாவட்ட நீதிபதி, முதன்மை சிறப்பு நீதிமன்றம் அவர்கள் கடித எண்.481/2017 மூலம் வரலான RPR.No.206/2017 என்று எழுதி ஒட்டப்பட்ட லேபிளுடன் கூடிய ஒரு காகித பொட்டலத்தை (மாதிரி) நிலைய தலைமைக்காவலர்-திரு.கார்த்திகேயன் என்பவர் மூலம் மதுரை, வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. பின்னர் இந்த வழக்கின் புலன் விசாரணையில் 28.06.2017 அன்று பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டு அதன் மூலம் பகுப்பாய்வு அறிக்கை பெற்றும், அந்த ஆய்வறிக்கையை வழங்கிய பகுப்பாய்வு அறிவியல் அலுவலர்-திரு.இராமச்சந்திரன், வட்டார தடய அறிவியல் ஆய்வகம் , மதுரை என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அந்த வாக்குமூலத்தில் மேற்படி பகுப்பாய்வில் இருந்து பெறப்பட்ட முடிவில் அந்த மாதிரியில் கெனபினாய்டு இருப்பது கண்டறியப்பட்டு கஞ்சா என்பதை உறுதி செய்ததன் பேரில் எதிரியின் மேல் ச/பி.8(c) r/w20(b)(ii)(B) NDPS ACTன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். கைப்பற்றிய சொத்தினை பகுப்பாய்வு செய்யக்கோரி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு நீதிமன்றம் அனுப்பிய கடிதம் **அ.சா.ஆ.10** ஆகும். பகுப்பாய்வு அறிக்கை **அ.சா.ஆ.11** ஆகும். (அ.சா.11 ஆவணம் நீதிமன்ற தலைமை எழுத்தரால் பெறப்பட்ட ஆவணம் என்றும் அது நீதிமன்ற ஆவணம் என்பதால் தற்போது குறியீடு செய்ய முடியாது என்றும் எதிரி தரப்பு வழக்கறிஞரால் ஆட்சேபனை செய்யப்பட்டது. அந்த ஆட்சேபனை நிராகரிக்கப்பட்டு ஆவணம் குறியீடு செய்யப்பட்டது.) பகுப்பாய்வுக்கு சென்று திரும்பிய கஞ்சா சா.பொ.1 ஆகும். மீதம் உள்ள கஞ்சா சா.பொ.2 ஆகும்.

**குறுக்கு விசாரணை:**

வழக்கில் 12.09.2016 தேதி கைப்பற்றப்பட்டதாக சொல்லப்பட்ட சான்றுப் பொருட்கள் சுமார் 8 மாதங்கள் கழித்து 23.05.2017அன்று இந்த நீதிமன்றத்தில்

ஒப்படைக்கப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லக் கூடிய மாதிரிகளை சுமார் 8 மாதங்கள் கழித்து பகுப்பாய்வுக்கு அனுப்பட்டது என்றால் சரிதான். இடைப்பட்ட காலத்தில் மேற்படி பகுப்பாய்வுக்காக அனுப்பட்ட மாதிரிகள் எங்கிருந்தது, யார்வசம் இருந்தது என்பதை காட்டும் எந்த ஒரு ஆவணமும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் முதல் தகவல் அறிக்கை மற்றும் அத்தாட்சி ஆவணங்களை பார்வையிட்டேன் என்றால் சரிதான். மேற்படி 13.00 மணிக்கு **தயாரிக்கப்பட்டதாக** சொல்லப்படும் அத்தாட்சியில் சட்டப்பிரிவுகளும், குற்ற எண்ணும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அத்தாட்சியில் எதிரியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். நான் சொன்னபடி சொன்ன தேதி, நேரத்தில் எந்த ஒரு சம்பவமும் நடைபெற வில்லை என்றாலும் எந்த ரோந்து நடவடிக்கையும் செய்யவில்லை என்றாலும் ஏற்கனவே ஆய்வாளர் காவல் நிலையத்தில் வைத்து தயாரித்து வைத்திருந்த ஆவணத்திற்கு ஆதரவாக குற்றப்பத்திரிக்கை தயாரித்துள்ளேன் என்றாலும் இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த ஒரு சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை: